<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

முன்னிலை – திரு. எம். விக்னேஷ் பிரபு, எம்.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் நாள் திங்கட்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.96/2024</u>**

CNR.No.TNTM04-000216-2024

முருகன் ... வாதி

// எதிர் //

சித்ரா ... பிரதிவாதி

இவ்வழக்கானது செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்தநிலையில் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி உத்தரவிற்கிணங்க விடுவி.எண்.5664/2024 தேதி 30.10.2024 ன் கீழ் கூடுதல் சார்பு நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 20.11.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மண்ணரசு அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய அழைத்தும் பிரதிவாதி தரப்பு ஆஜராகாததால் பிரதிவாதி தரப்பு ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், வாதிதரப்பு வாதுரையை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

தாவா வாதிக்கு சேர வேண்டிய தாவா தொகையான ரூ.6,85,250/–ம் மற்றும் அசல் தொகை ரூ.5,00,000/–க்கு 18% வட்டி வீதம் கொடுக்கும்படிக்கும்

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2025.12.08 12:41:23 +0530

மற்றும் மேற்கண்ட தொகைக்கு பின்வட்டியும் கோர்ட் செலவும் வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்கும்படி தீர்ப்பளிக்கக்கோரி வாதியால் வழக்கு தாக்கல்.

## 2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்

கடந்த 01.03.2022 தேதியில் பிரதிவாதி வாதியிடம் ரூ.5,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக வாதி பெயருக்கு பிரதிவாதி தாவா பிராம்சரி நோட்டுகள் வாசகப்படி சரியான பிரதிபிரயோஜனத்துடன் கொடுக்கவேண்டிய தொகை ரூ.5,00,000/-க்கு ரூ100/-க்கு வட்டி ரூ.2/-ஆக சேர்த்து கூடிய அசல் வட்டி தொகையை வாதி வேண்டும்போது வாதிக்காவது வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தலா ரூ.5,00,000/- த்திற்கு பிராம்சரி நோட்டுடினை அதே தேதியில் வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், தாவா தொகையை கொடுத்து பைசல் செய்யும்படி வாதி பலமுறை பிரதிவாதியை நேரில் கேட்டும் பிரதிவாதி மேற்படி தாவா தொகையை பைசல் செய்யவில்லை என்றும், தாவா தொகையை கொடுத்து பைசல் செய்யும்படி வாதி வழக்கறிஞர் மூலம் 23.12.32023 தேதியில் அறிவிப்பு கொடுத்தும், அந்த அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டும், பிரதிவாதி பிராமிசரி நோட்டுக்களில் கண்ட அசல் மற்றும் வட்டி தொகையை பைசல் செய்யவில்லை என்றும், பிரதிவாதி வேண்டுமென்றே தொகையை கொடுத்து பைசல் செய்யாமல் வீண் காலதாமதம் செய்துவருகிறார் என்றும், எனவே வாதிக்கு சேர வேண்டிய தாவா தொகையான ரூ.6,85,250/-யினை அசல் வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து வசூலித்து தரும்படி தாவா தாக்கல்.

## 3. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்

தாவா சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், இத்தாவா பிரதிவாதி எதிர்வழக்குரையில் ஒத்துக்கொள்ளும் சங்கதிகள் தவிர

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.12.08 12:41:32 +0530

தாவா ஏணைய சங்கதிகளை வாதி தாவாவில் சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், வாதி கட்டுமானத் தொழில் செய்பவர் ஆவார் என்றும், பிரதிாதி வீடுகட்டப்போவதாக வாதியிடம் கூறினார் என்றும், அதற்கு வாதியஹும் வீடுகட்டித்தர ஒப்புக்கொண்டார் என்றும், அவ்வாறு வீடு கட்டும்பொழுது சிறு சிறு செலவுகளை வாதியே செய்துவந்தார் என்றும், அதாவது செங்கல் வாங்கவும், சிமெண்ட் வாங்கவும் சில தொழிலாளர்களின் கூலிக்கும் சில நாட்கள் வாதியே கொடுத்தார் என்றும், அதனையும் கணக்கில் எழுதிவைத்துக்கொள்வதாக கூறினார் என்றும், ஒருபோதும் இப்பிரதிவாதி வாதியிடம் ரொக்கக் கடனாக பெற்றதில்லை என்றும், அதேபோன்று வாதி பெயருக்கு யாதொரு அண்டிபாண்டும் எழுதிக்கொடுத்து கையெழுத்து செய்ததில்லை என்றும், அவ்வாறு வீடு கட்டும்போது ஏற்பட்ட செலவுகளுக்கான கணக்கை இப்பிரதிவாதி வாதியிடம் கேட்டபோது ரூ.3,50,000/– செலவு செய்ததாக வாதி பிரதிவாதியிடம் கூறினார் என்று', ஆனால் இப்பிரவிாதி கணக்கு பார்த்தபோது தவறான கணக்குகளை எழுதிவைத்துள்ளதால் மேற்சொன்ன தொகை தரமுடியாது என்றும், சரியாக கணக்கு பார்த்தபிறகு அதற்கான தொகையை தருவதாக வாதியிடம் பிரதிவாதி கூறினார் என்றும், ஆனால் வாதி பணத்தை உடனடியாக தரவேண்டும் என பிரதிவாதியை தொந்தரவு செய்துவந்ததால் பிரதிவாதி புளியரம்பாக்கம் கிராமத்தில் உள்ள தனக்கு சொந்தமான வீட்டுமனையின் அசல் ஆவணத்தை வாதியிடம் கொடுத்துவைத்தார் என்றும், அதற்கு வாதி புளியரம்பாக்கம் கிராமத்தில் உள்ள விற்பனை செய்ய நேர்த்தால் தாங்கள் கையெழுத்து செய்யவேண்டும் என நிபந்தனையுட்ன் அசல் ஆவணத்தை பெற்றுச்சென்றார் என்றும், இப்பிரதிவாதியும் வாதிக்கு கொடுக்கவேண்டிய கடனை சரிபார்த்து மனையை விற்கும்போது மீதத்தொகையை பெற்றுக்கொள்ளலாம் என இருந்து வந்தார் என்றும், வாதி தாவாவில் கூறியுள்ளதுபோல ஒருபோதும்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.12.08 12:41:39 +0530

மொத்தமாகவும், ரொக்கமாகவும் வாதியிடம் இப்பிரதிவாதி கடன் பெறவில்லை என்றும், ஒருபோதும் இப்பிரதிவாதியிடம் வாதி அண்டிபாண்ட கடன் தொகையை கேட்டது கிடையாது என்றும், வீடுகட்டும்போது செலவு செய்த தொகையைத்தான் வாதி பிரதிவாதியிடம் கேட்டு வந்தார் என்றும், அதற்காகத்தான் அசல் ஆவணத்தை இப்பிரதிவாதி வாதியிடம் ஒப்படைத்துள்ளார் என்றும், வாதி தான் அனுப்பிய வழக்கறிஞ்ரி அறிவிப்பின் அடிப்படையில் எந்த சட்டநடவடிக்கையும் மேற்கொள்ளமாட்டேன் என்று கூறியதாகவும், அதனால் இப்பிரதிவாதி யாதொரு பதில் அறிவிப்பும் அளிக்கவில்லை என்றும், வாதியிடம் பிரதிவாதி யாதொரு ஆவணத்திலும் கையெழுத்து செய்து கொடுக்காத நிலையில் வாதியே மோசடியாக பிரதிவாதியின் கையெழுத்தைப் போன்று அண்டிபாண்டில் மோசடியாக கையெழுத்து இட்டு இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே தாவாவானது தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்று எதிர்மனுதாரர் பரம் எதிருரை தாக்கல்.

3. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை ஆகியவற்றினை நன்கு பரிசீலனை செய்து 21.01.2025 தேதியன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. தாவா கடனுறுதிச்சீட்டு உண்மையானதா ?
2. வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு மறுபயனாக வாதிக்கு பிரதிவாதியால் கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதா ?
3. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு அளிக்கதக்கதா ?
4. வேறு என்ன பரிகாரங்கள் வாதிக்கு அளிக்கதக்கது ?

4. வாதி தரப்பில் வாதி திரு. முருகன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1–ன்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.12.08 12:41:51 +0530

மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பிற்கு போதிய வாய்ப்புகள் வழங்கியும் வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்யாததாலும், பிரதிவாதியை 24.09.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணசாட்சியங்கள் இல்லை.

5. வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிருபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை அனுமதித்து தீர்ப்பளிக்குமாறு வாதிட்டார்.

6. எழுவினா 1 முதல் 4ற்கான தீர்வுகள்

வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது, ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வாதி பிரதிவாதிக்கு எதிராக தாவாவில் கண்டுள்ள தொகையினை அசல் வட்டியுடன் வாதிக்கு பிரதிவாதி திருப்பி செலுத்த தீர்ப்பளிக்க வேண்டிய தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா கடனுறுதிசீட்டானது 01.03.2023 அன்று ஏற்பட்டுள்ளது. வாதி இத்தாவாவினை 25.04.2024 தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த வகையில் வாதியின் இத்தாவாவானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை. வாதி இத்தாவா தாக்கல் செய்யும்போதே பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தினை தீர்ப்பிற்கு முன் பற்றுகை செய்து உத்தரவிடவேண்டி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் 1908 கட்டளை 38 விதி 5 –ன் கீழ் மனு தாக்கல் செய்து அந்த மனுவில் பிரதிவாதி பொறுப்புறுதி Affidavit (Security furnished) தாக்கல் செய்ததால் அந்த மனுவான I.A.No. 01/2024 ஆனது



M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2025.12.08 12:41:58 +0530

15.06.2024 தேதியன்று முடித்துவைத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, வாதியான வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டினை நன்கு பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது 01.03.2022 தேதியன்று ரூ.5,00,000/- வாதியிடம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. வாதி தாக்கல் செய்துள்ள தாவாவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள போதிலும், எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளைப் பொறுத்து தகுந்த வாய்மொழிசாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களைக் கொண்டு நிரூபித்து வாதியின் வழக்கை பொய்பிக்கவில்லை. மாறாக பிரதிவாதி தரப்பிற்கு வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய போதிய வாய்ப்புகள் வழங்கியும், குறுக்குவிசாரணை செய்யாததாலும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார். வாதியான வா.சா.1 முதன்மை சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்து, தன் தாவாவிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். மேலும் வாதி தாவாவில் கண்ட தொகையை அசல் வட்டியுடன் செலுத்தும்படிக்கு பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். வா.சா.ஆ.2 அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளார் என்பது வா.சா.ஆ.3 அஞ்சலக ஒப்புதல் அட்டையிருந்து அறியமுடிகிறது. வாதி தனது வழக்கறிஞர் மூலம் கொடுத்த வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவித்துள்ள சங்கதிகளை மறுத்து பிரதிவாதி தரப்பில் எவ்வித பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை.

7. வாதியிடம் பிரதிவாதி சரியான பிரதிபிரயோஜனத்துடன் கொடுக்க வேண்டிய தொகைக்காக ரூ.2,00,000/-க்கு வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டினை வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி தொகையினை



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.12.08 12:42:05 +0530

வாதி பிரதிவாதியிடம் நேரில் பலமுறை கேட்டும் தாவாவில் கண்ட தொகையினை அசல் வட்டியுடன் செலுத்தாததால் வாதி பிரதிவாதிக்கு எதிராக இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளார் என்பது மிகத்தெளிவாக தெரியவருகிறது. வாதி தனது தாவாவில் தெரிவித்துள்ள சங்கதிகளை வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களை கொண்டு நிருபித்துள்ளதால் தாவாவில் கண்ட தொகையை அசல் வட்டியுடன் வாதிக்கு பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவர் ஆவார். எனவே வாதி தாவாவில் கோரியுள்ளபடி பிரதிவாதி வாதிக்கு தாவா தொகை ரூ.6,85,250/-ம் செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகை ரூ.5,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தீர்ப்பான நாள் வரை 12% வட்டியும், தீர்ப்பிற்கு பின்னிட்டு வசூலாகும் நாள்வரை 6% வட்டியும் செலுத்த வேண்டுமென்று இந்நீதிமன்றம் எழுவினாக்கள் 1 முதல் 3ஐ பொருத்து வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

இறுதியாக, வாதி தாக்கல் செய்துள்ள இத்தாவாவானது செலவுத்தொகையுடன் அனுமதித்து பிரதிவாதிகள் வாதிக்கு தாவா தொகை ரூ.6,85,250/-ம் செலுத்த வேண்டும் என்றும் அசல் தொகை ரூ.5,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தீர்ப்பான நாள்வரை 12% வட்டியும், தீர்ப்பிற்கு பின்னிட்டு, வசூலாகும் நாள் வரை 6% வட்டியுடன் செலுத்தவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு டிசம்பர் 08-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.12.08 12:42:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**<u>வாதி தரப்பு சாட்சி :</u>**

வா.சா.1 –முருகன், த/பெ.சின்னசாமி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | | |
|---|---|---|
| 1. வா.சா.ஆ.1 | 01.03.2022 | அண்டிபாண்டு அசல் |
| 2. வா.சா.ஆ.2 | 23.12.2023 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| 3.வா.சா.ஆ.3 | – | அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை</u>**

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2025.12.08 12:42:21 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.